## இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்.

**முன்னிலை: திரு.S.பாஸ்கரன்,B.Sc.,B.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**

2017 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2048 ஆவணித்திங்கள் 1 ஆம் நாள்

**அசல் வழக்கு எண்.88/16ல் இடைநிலை மனு எண்.74/17**

1. எலிசபெத்மேரி
2. சுசிலாமேரி
3. அல்லிஸ்மேரி
4. சின்னம்மாள்

**....மனுதாரர்கள்/ வாதிகள்**

-எதிர்-

ஆரோக்கியசாமி சுந்தரம்

**...எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி**

WEB COPY

இம்மனு என் முன்பாக 31.07.2017 இறுதி விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.**M.பாலையன், M.A.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.**V. ஜீவகுமார்,B.Sc.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கின் முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், மனுவை இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

### உத்தரவு

(1) மனுச்சொத்துக்களிலிருந்து எதிர்மனுதாரரால் வெட்டி அகற்றப்பட்டுள்ள மரங்களின் மதிப்பில் 5/6 பாகத்தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151ன்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(2) மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரத்தின் சுருக்கம்:**

மனுதாரர்கள் உடன்பிறந்த சகோதரிகள். எதிர்மனுதாரர் அவர்களின் உடன் பிறந்த சகோதரர். தரப்பினர்களின் பெற்றோரான சந்தியாகு உடையார் மற்றும் நட்சத்திரம் அம்மாள் இறந்தபின் தாவா சொத்துக்களில் பாகம் கேட்டு மனுதாரர்கள், எதிர்மனுதாரர்மீது பாக வழக்கு தாக்கல் செய்துள்ளனர். வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிர்மனுதாரர் 18.06.2017ல் மனு சொத்துக்களில் உள்ள யூக்கலிப்டஸ் உட்பட்ட மரங்களை வெட்டி அகற்றி மனுதாரர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அதனால், காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டபோது அதனை அவர்கள் உரிமையியல் தகராறு என சொல்லியும், விசாரித்து மரங்கள் வெட்டப்படுவதை தடுப்பதாக சொல்லியும் இருந்ததை நம்பி மனுதாரர்கள் அமைதியாக இருந்துவிட்டனர். 20.06.2017 அன்று காலை 9.00 மணிக்கு எதிர்மனுதாரர் கூட்டமாக ரௌடிகளை வைத்துக்கொண்டு ஆயுதங்களுடன் வந்து மனுச்சொத்தில் உள்ள அனைத்து மரங்களையும் வெட்டி அகற்றிவிட்டார். வெட்டப்பட்ட மரங்களின் மதிப்பு ரூ.7,50,000/- இருக்கும். அதனை எதிர்மனுதாரர் மட்டுமே அடையத் தகுதியுடையவரல்ல. மனுதாரர்களுக்கும் அதில் பாகம் உண்டு. ஆகவே, அதனை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய உத்தரவிட வேண்டும்.

**<u>(3) எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

மனு சட்டப்படியும், சங்கதிகள்படியும் நிலைநிற்கத்தக்கதில்லை. வழக்குரையில் கூறப்படாத சொத்துக்கள் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மனுவில் கூறப்பட்டுள்ளதுபோல் இந்த எதிர்மனுதாரர் மரங்கள் எதையும் வெட்டவில்லை. இந்த எதிர்மனுதாரர் சந்தியாகு உடையார் எழுதிவைத்த பதிவான உயில்படி தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார். அதன் அடிப்படையில் இம்மனு தள்ளுபடியாக வேண்டும். மனுதாரர்கள் தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. வழக்கு விசாரணையை காலதாமதப்படுத்தும் நோக்கில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

WEB COPY

**<u>(4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்:</u>**

**“இம்மனு அனுமதிக்கத்தக்கதா?” என்பதேயாகும்.**

**<u>(5) பிரச்சினை:</u>**

தாவா சொத்துக்களில் 4/6 பாகம் கேட்டு மனுதாரர்களால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் 2ஆம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராகிவிட்டார். முதல் பிரதிவாதி மட்டுமே கட்சியாடி வருகிறார். மேற்படி கட்சியில் அவர் தாவா சொத்துக்கள் தன் பெற்றோர்களான சந்தியாகு உடையார் மற்றும் நட்சத்திரம் அம்மாள் எழுதிவைத்த உயிலின்படி தனக்கு பாத்தியப்பட்டது என்பதாகவும், தாவா “A” பட்டியலில் கண்டுள்ள புல எண்.196A-8C-ல் உள்ள சொத்து தன் சுய சம்பாத்திய சொத்து எனவும் கட்சியாடுகிறார். மேலும், தாவாவில் குறிப்பிடப்படாத புல எண்கள் 202/6C மற்றும் 201/10 ஆகியவற்றில் அடங்கிய சொத்துக்களையும் இம்மனுவில் சேர்த்துள்ளதாகவும், மற்றொரு வாதத்தை முன்வைத்துள்ளார். இருப்பினும், மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி

அதே காரணத்திற்காக அது திருப்பப்பட்டபின் மேற்படி இரண்டு சொத்துக்களையும் நீக்கிவிட்டு தான் மனுதாரர்கள் மனுவை திரும்ப தாக்கல் செய்துள்ளனர். ஆகவே, மேலே கண்ட இரண்டாவது வாதம் தற்போது தேவையற்றதாகிறது. எதிர்மனுதாரர் 18.6.2017 அன்று மரங்களை வெட்ட முற்பட்டதாகவும், அதன்பேரில் காவல்துறையில் புகார் கொடுக்கப்பட்ட பின்னரும் 20.06.2017ல் ரௌடிகளுடன் வந்து எதிர்மனுதாரர் மரங்கள் அனைத்தையும் வெட்டிவிட்டதாகவும், அவ்வாறு வெட்டப்பட்ட மரங்களின் மொத்த மதிப்பு ரூ.7,50,000/- எனவும், மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் தங்கள் பாகவீதமான 5/6 பாகத்தை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவும் மனுதாரர்கள் கேட்டுள்ளார்கள். அசல் வழக்கிலேயே 4/6 பாகம்தான் மனுதாரர்களால் கோரப்பட்டுள்ளது. ஆகவே, மனுவில் 5/6 பாகம் என கேட்டுள்ளதும் தவறான கோரிக்கையாகும். மேலும், மரங்களின் மதிப்பு எவ்வளவு என்பது ஒரு விஸ்தாரமான விசாரணைக்குப்பின்னர்தான் முடிவு செய்யமுடியும். மனுதாரர்கள் கோரியுள்ளதுபோல் தாவா சொத்துக்களில் பாகம் உண்டு என நிரூபிக்கும்பட்சத்திலும், மரங்கள் பிரிபடாத சொத்துக்களிலிருந்து வெட்டப்பட்டு, அகற்றப்பட்டுவிட்டன என்பது நிருபிக்கப்படும்பட்சத்திலும், அவற்றின் மதிப்பு நிரூபிக்கப்படும்பட்சத்திலும் மனுதாரர்கள் இறுதி விசாரணையில் அதற்கான பாகத்தை அடையமுடியும். ஆகவே, தற்போதே மனுதாரர்கள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளை அவ்வாறே ஏற்று ரூ.7,50,000/-ல் மனுதாரர்களின் பாகத்தை எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவேண்டும் என்பது சரியான அணுகுமுறையாக அமையாது. இவையெல்லாம், வழக்கின் இறுதி முடிவின்போது தீர்மானித்துக்கொள்ளப்பட்டக்கூடியவை. ஆகவே, எதிர்மனுதாரரை தொகை வைப்பீடு செய்ய வேண்டும் என தற்போது உத்தரவிட இயலாது. எனவே, இம்மனு அனுமதிக்கத்தக்கதில்லை என இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. மனுவின் செலவுத்தொகை பொறுத்து உத்தரவு ஏதுமில்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, **2017ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் 17ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

(ஒ-ம்) ***S*. பாஸ்கரன்**

இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.

தஞ்சாவூர்

WEB COPY

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு**
**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை**

(ஒ-ம்) ***S*.பாஸ்கரன்**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமா்வு நீதிபதி.
தஞ்சாவூர்

WEB COPY

**வரைவு/சீரான உத்தரவு**
**அசல் வழக்கு எண்.88/16ல்**
**இடைநிலை மனு எண்.74/17**
**நாள்: 17.08.2017**

WEB COPY

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்.**

**முன்னிலை: திரு.*S*.பாஸ்கரன்,B.Sc.,B.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**

2017 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2048 ஆவணித்திங்கள் 1 ஆம் நாள்

**அசல் வழக்கு எண்.88/16ல் இடைநிலை மனு எண்.74/17**

1. எலிசபெத்மேரி, வயது 62, க-பெ. ஆரோக்கியசாமி, இந்தியன், கிறிஸ்தவர், வசிப்பிடம் பழைய எண்.1133/A, புதிய எண். 9/158, நாகலெஷ்மி நகர், சிட்லப்பாக்கம், மேடவாக்கம் அருகில், சென்னை மாநகராட்சி மற்றும் முன்சிபி

2. சுசிலாமேரி, வயது 57, க-பெ. சவேரியார், இந்தியன், கிறிஸ்தவர், வசிப்பிடம் முத்தாண்டிப்பட்டி கிராமம், செங்கிப்பட்டி வழி, தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் முன்சிபி

3. அல்லிஸ்மேரி, வயது 53. க-பெ. செல்வராஜ், இந்தியன், கிறிஸ்தவர், வசிப்பிடம் திருவளர்ச்சிப்பட்டி, ஏர்போர்ட் அஞ்சல், திருச்சி மாநகராட்சி மற்றும் முன்சிபி

4.சின்னம்மாள், வயது 48, க-பெ. ஜான்பீட்டர், இந்தியன், கிறிஸ்தவர், வசிப்பிடம் கதவிலக்கம் 30, ஆஞ்சநேய நகர், குண்டூர், திருச்சி மாநகராட்சி மற்றும் முன்சிபி

**....மனுதாரர்கள்/ வாதிகள்**

-எதிர்-

ஆரோக்கியசாமி சுந்தரம், வயது 58, த-பெ. (லேட்) சந்தியாகு, இந்தியன், கிறிஸ்தவர், வசிப்பிடம் நல்லப்பன் தெரு, முத்தாண்டிப்பட்டி கிராமம், செங்கிப்பட்டி, தஞ்சாவூர் மற்றும் முன்சிபி

**...எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி**

மனுச்சொத்துக்களிலிருந்து எதிர்மனுதாரரால் வெட்டி அகற்றப்பட்டுள்ள மரங்களின் மதிப்பில் 5/6 பாகத்தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய எதிர்மனுதாரருக்கு உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு 151ன்கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள்: 21.06.2017 மற்றும் 27.06.2017

இம்மனு என் முன்பாக 31.07.2017 இறுதி விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.**M.பாலையன், M.A.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.**V. ஜீவகுமார்,B.Sc.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக்

WEB COPY



கேட்டும், வழக்கின் முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், மனுவை இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>தீர்ப்பாணைக்கட்டளை</u>**

(1) இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

(2) மனுவின் செலவுத்தொகை பொறுத்து உத்தரவு ஏதுமில்லை. **(மனுதாரர்கள் தரப்பு செலவுத்தொகை ரூ.25/- (மனு தாக்கல் செலவு மட்டும்) எனவும், எதிர்மனுதாரர் தரப்பு செலவுத்தொகை ரூ.(இல்லை)எனவும் கணக்கிடப்படுகிறது. இருதரப்பிலும் செலவுத்தொகைப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை )**

**<u>சொத்து விபரம்</u>**

பூதலூர் தாலுக்கா, புதுப்பட்டி கிராமம், சர்வே எண்.202/6A, 0.16 ares, 202/6B-0.16 ares, 202/6D – 0.17 ares, 203/16-0.21.5.

**<u>செலவுத்தொகைப்பட்டியல்</u>**

| **<u>மனுதாரர்கள் தரப்பு</u>** | **<u>எதிர்மனுதாரர் தரப்பு</u>** |
|---|---|

மனுவின்மீது நீதிமன்ற முத்திரைக்கட்டணம்..ரூ. 20.00

வக்காலத்து..........................................................ரூ. 5.00

--------------------

கூடுதல் ….....ரூ.25.00

-------------------

**செலவுத்தொகைப்பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை**

**(மனு தாக்கல் செலவு மட்டும், செலவுத்தொகைப் பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை)**

2017ஆம் ஆண்டு **ஆகஸ்டுத்திங்கள் 17ஆம் நாள்** என் கையொப்பமும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும்**
**அமர்வு நீதிபதி, தஞ்சாவூர்**

**தீர்ப்பாணைக்கட்டளை**
**அசல் வழக்கு எண்.88/16ல்**
**இடைநிலை மனு எண்.74/17**
**நாள்: 17.08.2017**

WEB COPY